# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2012 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2012, பெப்புருவரி மாதம் 24 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *11.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

**2012 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

**இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

''இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று (முதலாவது கல்வி அமைச்சர் காலஞ்சென்ற கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர அவர்களால் தாபிக்கப்பட்ட ஐம்பத்துநான்கு பாடசாலைகளின் பழைய மாணவர்களைக் கொண்டது) அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப் பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர் புடைய அதன் குறிக்கோள்களையும் எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இதற்குமுன்னர் இலங்கை யில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப் பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2**. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''கழகம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ளவர்களும் அல்லது இத் தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படவேண்டியவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் ''இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகம்'' என்னும் பெயர் இலங்கை மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர் கழகத்தைக் கூட்டிணைத்தல்.

மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வேண்டுமென்பதுடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவையாகவிருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் காலஞ்சென்ற கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களால் தாபிக்கப்பட்ட முன்னோடி மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர்களை ஒரே குடையின்கீழ் ஒன்று சேர்த்தல் ;

(ஆ) சொல்லப்பட்ட மத்திய கல்லூரிகளின் கலாசாரம் மற்றும் சமூக விழுமியங்களையும் மரபுகளையும் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் ;

(இ) சொல்லப்பட்ட மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தமது உயர்தொழில் மற்றும் தொழில்சார் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்காக அவர்களுடனான பரஸ்பர ஒத்துழைப்புடன் பணிபுரிதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு கல்வி அமைச்சுடனும் மற்றும் ஏனைய இயைபான அரசாங்க, மாகாண அதிகாரசபைகளுடனும் ஒத்திசைதல் ;

(உ) சமூக, பொருளாதார, கல்வி மற்றும் கலாசார செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள இயைபான ஏனைய அமைப்புக்களுடன் கூட்டிணைதல் ;

(ஊ) ஆற்றலும் விவேகமும் படைத்த மாணவர்கள் அவர்களது சமூக, பொருளாதார அந்தஸ்துகளைப் பொருட்படுத்தாமல் உயர்கல்வித்தரங்களை எய்துவதற்கும் அவசியமானவிடத்து புலமைப்பரிசில்கள் அளிப்பதன்

மூலமும் வேறு வழிமுறைகள் மூலமும் மாணவர்களுக்கு உதவி வழங்குவதற்கும் அவர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கும் வழிமுறையொன்றாக இலவசக் கல்வியைப் பரிந்துரைத்தல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்திற்காக கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரவின் பெயரில் நிறுவகத்தைத் தாபித்தல் ;

(ஏ) சொல்லப்பட்ட மத்திய கல்லூரிகளுடன் தொடர்புகளைப் பேணுதலும் அவற்றின் கல்விசார்ந்த முன்னேற்றத்திற்கு ஏதேனும் உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்குதலும் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுடன் தொடர்புபட்ட தகவல்களைச் சேகரித்தலும் பரப்புதலும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும் நடாத்தவும் முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுப்பதற்கும் அல்லது திரட்டுவதற்கும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து அளிப்புகளையும் கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடு செய்யவும் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதனால் கொள்ளப்பட்ட அல்லது வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையானவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துவதற்கும் வேலைநீக்கம் செய்வதற்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யக்கூடியவாறு அவற்றிற்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட பதவிதாங்குநர்களையும் அத்தகைய வேறு அலுவலர்களையும்கொண்ட நிறைவேற்றுக் குழுவொன்றினால் முகாமைசெய்யப்படுதல் வேண்டும்.

*(2)* முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்தவர்களான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** *(1)* கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் முழு உறுப்பினர்களின் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குகளால் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாயிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப் பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதேமுறையிலும் அவை மாற்றப்படலாம், அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்

*(2)* கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தனிசுகளும், பொறுப்புகளும்.

**7.** *(1)* இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று இருந்த கழகத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் பொறுப்புவிடுவிக் கப்படுதலும் வேண்டுமென்பதுடன் அத்தேதியன்று கழகத் திற்கு வருமதியான தனிசுகளும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத் தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*(2)* கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாப னத்தின் ஏதேனும் தனிசை அல்லது பொறுப்பைக் கையுதிர்க்கும் நோக்கத்திற்கு ஆண்டு உறுப்பாண்மைக் கட்டணத்தை அல்லது ஆயுள் உறுப்பாண்மைக் கட்டணத்தை விஞ்சிய பணத்தொகை எதனையும் செலுத்துதலாகாது.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனங்களை வைத்திருக்கலாம். அத்துடன் கையுதிர்க்கலாம்.

**8**. கூட்டுத்தாபனம் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரனசாசனக் கையளிப்பு, என்ற வகையில் அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக்கப்படக் கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்கும், வைத்திருப்பதற்கும் சட்டப்படி இயலுமாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் விற்க, ஈடுவைக்க, குத்தகைக்கு கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது அதனை வேறுவகையில் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத் துடனும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டுமென்பதுடன் கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்றவகையில் இதன்பின்னர் பெறப்படவுள்ள எல்லாப் பணங்களும் கூட்டுத் தாபனத்தின் கணக்கில் கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ், கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுதலிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் பணமும் ஆதனமும் கூட்டுத்தாப னத்தின் குறிக்கோள்களை ஊக்குவித்தல் தொடர்பில் மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**10.** (1) கூட்டுத்தாபனம் கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டவையும் செலவிடப்பட்டவையுமான எல்லாப் பணங்களினதும் தகுந்த கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒவ்வோராண்டும் குறைந்தபட்சம் ஒருதடவையாவது பரிசீலனை செய்யப்பட்டு கணக்காய்வு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் வருமான, செலவினக் கணக்கினதும் ஐந்தொகையினதும் செம்மை கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரால் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் தவிசாளரினதும் செயலாளரினதும் அல்லது கூட்டுத்தாபனத்தால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆட்களினதும் முன்னிலையில் தவிர எத்தன்மையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப் படுதலாகாது. இவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாகத் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்ப மிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனுமாள் கையொப்பமிடுவதனின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினது உரிமை களையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒடுக்குதல் அல்லது ஒழித்துக் கட்டுதல்.

**13.** கூட்டுத்தாபனத்தின் முறையாகக் கூட்டப்பட்ட விசேட பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையானோர் கூட்டுத்தாபனத்தில் அலுவல்களை ஒடுக்கத் தீர்மானிக்கும் பட்சத்தில் எல்லாத் தனிசுகளையும் பொறுப்புக்களையும் செலுத்தித் தீர்த்தபின்னர் எஞ்சியிருக்கும் ஏதேனும் பணம் அல்லது ஆதனம் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் பொதுக்கூட்டத்தால் தீர்மானிக்கப்பட்டவாறு ஏதேனும் பகிரங்க சங்கத்திற்கு, சேவை நிறுவனத்திற்கு அல்லது பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்